
## நமக்கு ஏற்கெனவே ஒரு மேய்ப்பர் இருக்கிறார்

### உறவுமுறையிலான சபையில் தலைமைத்துவம் VIII

By Wayne Jacobsen in collaboration with Kevin Smith



கெவின் ஸ்மித் என்பவர் ஆஸ்திரேலியாவில் வாழ்கிற என் நல்ல நண்பர். நான் ஒருமுறை ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்தபோது, அவருடன் உரையாடி யதின் விளைவாக இந்தக் கட்டுரை எழுந்தது.

இது, உறவுமுறையிலான சபையில் வாழும் வாழ்க்கையைப்பற்றிய தொடர் செய்திகளில் எட்டாவது செய்தியாகும்.

கிறிஸ்துவின் சரீரம் என்ற வியத்தகு சமுதாயத்தில் இருக்க வேண்டிய தலை மைத்துவத்தைப்பற்றி இயேசு பேசியபோது, அவருடைய மனதில் என்ன இருந்தது?

ஆவிக்குரிய தலைமைத்துவத்தைக்குறித்து நான் இதுவரை கேட்ட வரையறை களிலேயே மிகச் சிறந்த வரை யறை இதோ இங்கு இருக்கிறது: நீ மிக மோசமான ஒரு தோல்வியில் சிக்கிக்கொண்டால், உன்னை யார் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று நீ விரும்புவாய்?

இயேசுவில் இருக்கும் ஜீவனின் நிறைவை நீ உண்மையாகவே அனுபவிக்க விரும்பினால், கிணற்றருகே இயேசு பெண்ணை நடத்தியதுபோல, உன்னை அவ்வளவு கனிவாக நடத்தக்கூடிய ஒருவரை நீ விரும்ப மாட்டாயா? உன்னைக் கனிவாக நடத்தக்கூடிய அதே நேரத்தில், நீ புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அவர் உனக்கு சத்தியத்தையும் கூறுகிறார். எனவே, நீ தேவனை விடுதலையோடு பின்பற்றலாம்.

இயேசு எப்படி வாழ்ந்தார் என்பதையும், தம் சபையில் இருக்க வேண்டிய தலைமைத்துவத்தைப்பற்றி அவர் தம் சீடர்களுக்கு என்ன கற்பித்தார் என்பதையும் சுருக்கமாகக் கூறக்கூடிய இதைவிட எளிமையான கூற்றை நான் கேட்டதேயில்லை. தீமோத்தேயுவிலும், தீத்துவிலும் பவுல் கூறக்கூடிய தகுதிகளின் பட்டியலும்கூட இயேசுவால் மறுசாயலாக்கப்பட அவரோடு போதுமான அளவுக்கு நடந்தவர்களையே சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் எந்த அளவுக்கு மறுசாயலாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய குடும்பங்களிலும், சமுதாயத்திலும், சத்தியத்தை அவர்கள் விடுதலையோடு வாழ்வதிலும் அதை நாம் தெளிவாகப் பார்க்க முடியும். இவ்வாறு, இயேசு மற்றவர்களுக்கு உதவிசெய்ததுபோல, இவர்களாலும் மற்றவர்களுக்கு உதவி செய்ய முடியும்.

நான் பல இடங்களுக்குச் செல்லும்போது, மக்கள் என்னிடம் ஒரு கேள்வியை அதிகமாகக் கேட்கிறார்கள். "உறவுமுறையிலான கிறிஸ்தவத்தைத் தழுவுகிற மக்களிடையே தலைமைத்துவம் எப்படி செயல்படுகிறது?" என்பதுதான் அந்தக் கேள்வி. சபையைப்பற்றிய நம் கண்ணோட்டத்தில் முக்கியமான இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நாம் கேட்கும் கேள்வி சுட்டிக்காட்டுகிறது. முதலாவது, சபை எந்த அளவுக்கு மனி தர்களின் தலைமைத்துவத்தைச் சார்ந்திருக்கிறது என்றால், அது இல்லாமல் எப்படி செயல்படுவது என் பதை அநேகரால் கற்பனைகூட செய்துபார்க்க முடியாது. இது துக்ககரமானது; ஏனென்றால், நாம் கிறிஸ்து வைச் சார்ந்து வாழாவிட்டால், சரீர வாழ்க்கையின் வல்லமையையும், எளிமையையும் நாம் ஒருபோதும் கண்டுபிடிக்க மாட்டோம்.

இரண்டாவது, தலைமைத்துவம் என்றால் நிறுவனங்களை நிர்வகிப்பது அல்லது கட்டுப்படுத்துவது என்ற கண்ணோட்டம் நமக்குள் ஆழமாகப் பதிந்திருப்பதால், பட்டங்களும் பதவிகளும் இல்லாமல் அதை நம் மால் இனங்காண முடியாது. தம் இராஜ்ஜியத்தில் தலமைத்துவத்துக்குப் பட்டங்களோ அல்லது பதவி களோ தேவையில்லை என்றும், தலைமைத்துவம் உலகத்தில் செய்கிற வேலையைவிட முற்றிலும் வித்தி யாசமான ஒரு வேலை அதற்கு உண்டு என்றும் இயேசு கூறினார். துரதிருஷ்டவசமாக, இந்தக் காரியத்தில் நாம் அப்படியே உலகத்தின் அச்சில் அழுத்தப்படுவதற்கு நம்மை விட்டுக்கொடுத்திருக்கிறோம்.

முடிந்தால், மனித தலைமைத்துவத்தைப்பற்றிய உங்களுடைய பழைய கருத்துக்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, ஒரு புதிய பார்வையோடு புதிய ஏற்பாட்டை மீண்டும் வாசியுங்கள். பிதாவினுடைய குடும்பத் தின் தலைமைத்துவம், நிச்சயமாக, அதின் தலைவர் என்ற முறையில் இயேசுவின் கரங்களிலும், நம்மை ஒன்றாக இணைத்து, தாம் விரும்புவதுபோல் நம்மைத் தம் சரீரத்தில் வைக்கிறவர் என்ற முறையில் பரிசுத்த ஆவியானவரின் கரங்களிலும் வைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவினுடைய சரீரத்தின் குவிமையம் மனித

தலைமைத்துவம் அல்ல. இயேசு அதைப்பற்றி அபூர்வமாகவே குறிப்பிடுகிறார். பெரும்பாலான நிருபங்கள் அதைப்பற்றி ஒன்றும் கூறவேயில்லை.

ஆனால், ஆதி சபையில் தலைவர்கள் இருந்தார்களே என்று மக்கள் சொல்வார்கள். நான் என் முழு இருதயத்தோடு ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அவர்கள் எப்படிப்பட்ட தலைவர்களாக இருந்தார்கள் என்பதுதான் முக்கியமான கேள்வி.

***உங்களுக்குள்ளே அப்படியிருக்கலாகாது***

"அப்பொழுது இயேசு அவர்களைக் கிட்டவரச் செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கலாகாது; உங்களில் எவனாலாகிலும் பெரியவனாக இருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்" (மாற்கு 14:42-45).

தேவனுடைய நிஜத்தில், தலைமைத்துவம் உலகத்தில் செய்கிற வேலையைவிட வித்தியாசமான வேலையைச் செய்கிறது என்று இயேசு தம் சீடர்களைத் தெளிவாக எச்சரித்தார். ஏனென்றால், அதற்கு ஆதாரம் நிர்வாகம் அல்ல. இருந்தபோதும், கிறிஸ்தவ தலைமைத்துவத்தைப்பற்றிய அநேக புத்தகங்களை இன்று வியாபார உலகத்திற்கு ஏற்றவாறு மிக எளிதாக மாற்றி எழுதப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு காரியத்தினால் நாம் நின்று, கேள்விகேட்ட வேண்டும்.

தலைமைத்துவம் என்பது கட்டளை கொடுப்பதற்கான வல்லமை என்று இயேசு கருதவில்லை. மாறாக, தேவனுடைய பிள்ளைகளாகக் கூடி வாழ்வதென்றால் என்ன பொருள் என்பதை அவருடைய மக்கள் கண்டுகொள்கையில் அவர்களைச் சேவிப்பதற்கான பேரார்வமே தலைமைத்துவம் என்பதே இயேசுவின் கருத்தாகும். கடந்த 10-12 வருடங்களில் தலைமைத்துவத்தைப்பற்றிய என் புரிந்துகொள்ளுதல் முற்றிலும் மாறிவிட்டது. வல்லமை என்ற பொருளில்தான் நான் அதைப் பார்த்ததுண்டு. ஆதிக்கம் செலுத்துதல், நிறுவன வல்லமை அல்லது ஒருவனுடைய வரத்தின் மதிப்பு போன்றவைகள்தான் தலைமைத்துவத்தை வரையறுக்கின்றன என்று நான் நினைத்தேன்.

ஆனால், தேவனில் அப்படி அல்ல. பிதாவின் அன்பில், ஆச்சரியமான விதத்தில் போதுமான அளவுக்கு, நான் வளர்வதற்கு எனக்கு மிக அதிகமாக உதவிசெய்தவர்கள் வல்லமையான எந்தப் பதவியையும் வகிக்கவில்லை; மாறாக, தேவனுடைய இருதயத்தைப் பார்ப்பதற்கான வழியை எனக்குச் சுட்டிக்காட்டும் அளவுக்கு என்னை சாதாரணமாக நேசித்தார்கள். அதன்பின், நான் அதைப் பின்பற்ற விரும்பினேனா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதை என் கையில் விட்டுவிட்டார்கள். உண்மையில், பிதாவின் குணத்தினால் அதிகமாக மறுசாயலாக்கப்பட்டிருக்கிற இப்போது நான் சந்திக்கிறவர்கள், இராஜ்ஜியத்திற்கு மிகவும் இன்றியமையாதது என்று நான் நினைத்த நிறுவனங்களின் வல்லமையை வெறுத்தொதுக்குகிறார்கள். நம் பிதாவுக்குப் பிரியமானதைச் செய்வதில் கவனம் செலுத்தி, ஒன்றாகச் சேர்ந்து நடப்பதற்குக் குழந்தையைப்போன்ற சுதந்தரத்தைப் பிரதிபலிக்காத எதையும் அவர்கள் ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்கள்.

நான் சந்தித்த இப்படிப்பட்ட முதல் நபர் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். அவர் தன் வாயைத் திறந்தபோதெல்லாம், மிக எளிமையான சொற்களில் ஞானம் அவருடைய வாயிலிருந்து பாய்ந்தோடியது. எந்த அளவுக்கு நான் தேவனை அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேனோ, அதைவிட அதிகமாக அவர் அறிந்திருந்தார். அவருடைய அமைதியான ஆவி, நான் சுவிசேஷங்களில் வாசித்திருந்த இயேசுவின் சுபாவத்தைக் கண்ணாடியைப்போல் பிரதிபலித்தது.

பல வருடங்களாக அவர் ஒரு பாஸ்டராக இருந்தார். அவருடைய ஸ்தாபனத்தில் ஒரு பயங்கரமான சண்டை ஏற்பட்டபோது, தன் பாஸ்டர் பதவியைத் தக்கவைத்துக்கொள்ள, மற்றவர்கள் பயன்படுத்திய தந்திரங்களைப் பயன்படுத்துவதை விரும்பாமல், அந்த நிறுவனத்தை விட்டு வெளியேறினார். அடுத்த 15 வருடங்களாக அவர் சுவரொட்டிகள் ஒட்டிக்கொண்டிருந்தார். வேறு ஓர் இடத்தில் பாஸ்டர் பதவி கிடைக்கும் வரையில், தன் வாழ்க்கையின் தேவைகளைச் சந்திக்க அவர் இந்த வேலையைச் செய்வார் என்று நான் நினைத்தேன். ஆனால், நான் நினைத்தது தவறு. ஒருநாள் நான் அவரிடம், "உங்களை நாங்கள் எங்கள் எதிர்கால மூப்பராகவும், இறுதியில், முழு நேர ஊழியக்காரராகவும் ஆக்க யோசித்துக்கொண்டிருக்கிறோம்," என்று சொல்லும்வரை நான் நினைத்தது எந்த அளவுக்குத் தவறு என்பதை நான் உணரவில்லை.

எனக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், கொஞ்ச நேரம் நான் சொல்வதைக் கவனித்துவிட்டு, தலையை ஆட்டி, "அதில் எனக்கு நாட்டம் இல்லை," என்று கூறினார். "உங்களுக்கு ஏன் இதில் நாட்டம்

இல்லை?” என்று நான் இன்னும் கொஞ்சம் வற்புறுத்திக் கேட்டபோது, புன்முறுவலுடன், “ஒருநாள் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்,” என்று என்னிடம் கூறினார்.

அவர் சொன்னதின் பொருள் என்னவென்று இப்போது எனக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். இந்தச் சரீரத்தில் தலைமைப் பொறுப்பில் மிகவும் வீரியமுடன் செயல்படுகிறவர்களுக்கு எந்தப் பட்டங்களோ, சம்பளமோ அல்லது அதிகாரமுடைய பதவிகளோ தேவையில்லை. உண்மையில் அந்தக் காரியங்களெல்லாம் அவர்களுடைய கவனத்தைத் தேவனுடைய அழைப்பிலிருந்து திசைதிருப்பிச் செல்பவை. ஆவிக்குரிய அதிகாரத்திற்கும், நிறுவனரீதியான வல்லமைக்கும் இடையே ஓர் உள்ளார்ந்த முரண்பாடு இருக்கிறது என்பதை கிறிஸ்துவின் ஜீவனால் கட்டமைக்கப்பட்டவர்கள் அறிந்திருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக, நிறுவனத்தில் இருக்கும் பெரும்பாலான மக்கள் இந்த உண்மையைப் புரிந்துகொள்வதில்லை. தலைவர்களாகச் செயல்படுபவர்களால் அவர்கள் தொடர்ந்து காயப்படுத்தப்படுகிறார்கள். தேவன் தம் சரீரம் முழுவதும் மிகவும் தாராளமாக வைத்திருக்கும் தலைமைத்துவத்தை அவர்கள் இனங்காணத் தவறுகிறார்கள். ஒருவேளை நாம் வித்தியாசமாகச் சிந்திக்க வேண்டியிருக்கும்.

***ஆதாரச் சான்றுகள் அல்ல, மாறாக மறுசாயலாக்கப்பட்ட வாழ்க்கைகள்***

ஓர் அலுவலகக் கதவில் ‘ரெவரெண்ட வேய்ன் ஜேக்கப்சென்’ என்று எழுதியிருந்ததை நான் முதன் முதலில் பார்த்ததை நான் ஒருபோதும் மறக்கமுடியாது. ஊழியம் என்பது ஒரு வாழ்க்கைத்தொழில் என்ற எண்ணமே என்னிடம் இருந்தபோதுங்கூட, 27 ஆண்டுகளுக்குமுன், அது எனக்கு ஒரு பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அப்போது எனக்கு வயது 22; வேதாகமத்தில் ஒரு பட்டம் பெற்றிருந்தேன். திருமணமாகி இரண்டு வாரங்களே ஆகியிருந்தது. கிறிஸ்துவின் சரீரத்தில் நான் எப்படி ஒரு தலைவனாக இருக்க முடியும்? அது இவ்வளவு சோகமாக முடியாமல் போயிருந்தால், இப்போது அது நகைப்புக்குரியதாக இருக்கும். அவ்வளவு ஆழமாக நான் அவரைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்தபோதுங்கூட, என் வாழ்க்கையில் அந்த நேரத்தைத் தேவன் பயன்படுத்தினார். இருந்தபோதும், அந்தக் கட்டத்தில் என் வாழ்க்கை எவ்வளவு கொஞ்சமாக தேவனுடைய முன்னுரிமைகளைப் பிரதிபலித்தது என்பதை இப்போது நான் உணர்கிறேன்.

இதை அந்த நேரத்தில் என்னால் உணரமுடியவில்லை. என் பேச்சுத்திறமையைப் பயன்படுத்துவதின்மூலமாகவும், முடிந்த அளவுக்கு எத்தனைபேர்மேல் ஆதிக்கம் செலுத்த முடியுமோ அத்தனைபேர்மேல் ஆதிக்கம் செலுத்தி என் தகுதியை நிரூபிப்பதின்மூலமாகவும் என் சுயத்தைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஆசைதான் என்னை உந்தித்தள்ளியதே தவிர, மற்றவர்களைச் சேவிக்க வேண்டும் என்ற ஆசை என்னை உந்தித்தள்ளவில்லை என்று இப்போது எனக்குத் தெரிகிறது. தேவன் இதைத்தான் விரும்பினாரா என்று கேள்விகூட கேட்காமல் மக்கள் இதைச் செய்தார்கள் என்பது இன்னும் விநோதமாக இருக்கிறது.

பல்கலைக்கழகப் பட்டங்கள், பேச்சுத்திறமை, வேதாகம அறிவு, மக்கள் கூட்டத்தைக் கவர்ந்திழுக்கும் திறமை, தரிசனத்தை நிர்வகிக்கும் திறமை, இலக்கை எட்டுவதற்கு அவர்களுக்கு உதவிசெய்ய மக்களைத் தந்திரமாகக் கையாளும் சாதுரியம் ஆகியவைகளை ஆதாரமாகக்கொண்டுதான் தலைமைத்துவத்துக்கான ஒருவனுடைய தகுதியை மக்கள் இன்று மதிப்பிடுகிறார்கள். மதரீதியான ஒரு நிறுவனத்திலிருந்து அவர்கள் சம்பளம் பெற்றால், அல்லது அவர்கள் ஒரு பதவியை வகித்தால், அவர்களுடைய வாழ்க்கை கிறிஸ்துவின் ஜீவனைப் பிரதிபலிக்காவிட்டாலுங்கூட, அவர்கள் தலைவர்கள் என்று நாம் நினைக்கிறோம்.

இது எப்போதாவது மாறுமா? நித்தியத்தின் இந்தப் பக்கத்தில் நிச்சயமாக மாறப்போவதில்லை. நம் மதரீதியான நிறுவனங்களை நடத்த மக்களை ‘ஆயத்தம்பண்ண’ இறையியல் கல்லூரிகளாலும், நிறுவன அந்தஸ்துகளாலுமான ஒரு தொழில்துறையை நாம் உருவாக்கியிருக்கிறோம். ஊழியத்துக்கு வரும்போதே, அவர்கள் பல இலட்சம் கடனோடு வருகிறார்கள். அந்தக் கடனைக் கொடுத்துத்தீர்க்க அவர்கள் ஒரு வேலையைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை இருக்கிறது. அப்படியிருக்கையில், கிறிஸ்துவின் ஜீவனால் மறுசாயலாக்கப்படவும், அதைத் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் வாழ்ந்துகாட்டவும் அவர்களுக்கு ஒருபோதும் நேரம் இருப்பதேயில்லை. எனவே, கிறிஸ்துவின் சரீரத்தில் முன்னின்று நடத்த வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களுக்கிடையே ஏராளமான தோல்விகளும், தவறுகளும் இருப்பது ஆச்சரியம் அல்லவே!

பெரும்பாலும் நல்ல நோக்கமுடைய மனிதர்களே ‘ஊழியத்துக்கு’ வருகிறார்கள். சரியான காரணங்களுக்காக அவர்கள் வருகிறார்கள்; ஆனால், தவறாக காரணங்களுக்காக அதில் தங்கியிருக்கிறார்கள். தலையுடன் உயிர்த்துடிப்புள்ள, அனுதின, வீரியமுள்ள, உறவுமுறையிலான தொடர்பில் வாழ்கிற மறுசாயலாக்கப்பட்ட வாழ்க்கை என்ற சாட்சியை வைத்துத்தான் புதிய ஏற்பாடு தலைமைத்துவத்தை இனங்கண்டுகொள்கிறது. அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்று மக்களால் சொல்ல முடியும். அவர்களிடம் என்ன வரங்கள் இருக்கின்றன அல்லது இல்லை என்பது ஒரு பொருட்டேயில்லை. அவர்களுடைய குணம் எந்த அளவுக்கு மறுசாயலாக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் காரியம். அவர்களுடைய குணம் எந்த அளவுக்கு மறுசாயலாக்கப்பட்டிருக்கிறது என்றால், இயேசு மற்றவர்களை நடத்துவதுபோல—சத்தியத்தையும், கனியையும் கலந்து—அவர்கள் மற்றவர்களை நடத்த ஆரம்பித்துவிடுகிறார்கள்.

இந்தக் காரணத்தினால்தான், ஒவ்வொரு விசுவாசியும் வேதாகமத்தில் காணப்படுகிற இயேசுவுடன் முற்றிலும் பரிச்சயமுடையவனாக இருக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். ஏனென்றால், மக்கள் வாழும் விதத்தில் அவர்கள் தேவனுடைய மகிமையையும், சத்தியத்தையும், நடத்தையையும் பிரதிபலிக்கும்போது மட்டுமே நம்மிடையே நாம் தேவபக்திக்குரிய தலைமைத்துவத்தை இனங்காண முடியும்.

***பதிலீடுகள் அல்ல, மாறாகத் துணைநிறைவுகள்***

கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வோர் அவயவமும் இயேசுவுடனான உறவில் வளர்ந்து, நிஜத்தைப்பற்றிய அவருடைய பார்வையில் வாழக் கற்றுக்கொள்ளும்போது மட்டுமே, கிறிஸ்துவின் சரீரம் ஆரோக்கியமாக இருக்க முடியும். அவரே தலையானவர். எனவே, அவர் "எல்லாவற்றிலும் முதன்மை இடம் பெற" முடியும் (கொலோ. 1:18). இயேசு நம் ஒவ்வொருவரிடமும் கொள்ள விரும்புகிற ஆழமான நட்பை ஒவ்வொரு விசுவாசியும் அனுபவிக்கும்போது மட்டுமே இது சாத்தியமாகும்.

துரதிருஷ்டவசமாக, மக்கள் அந்த நிஜத்தில் வாழ இன்றைய நாட்களில் தலைமைத்துவம் மக்களுக்கு உதவிசெய்வதில்லை. மாறாக, அது பெரும்பாலும் அதற்கு ஒரு பதிலீட்டைக் கொடுக்கிறது. மக்களும் அதை அப்படியே விரும்புகிறார்கள். இஸ்ரவேல் மக்களைப்போல், அநேகர் தேவனைக் கொஞ்சம் தூரத்தில் வைக்க விரும்புகிறார்கள். தலைவர்கள் என்றழைக்கப்படுகிறவர்கள் தங்களுக்காகத் தேவனோடு இடைப்பட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே, தங்களுக்கு மிகச் சிறந்தது என்று அவர்கள் நினைக்கும்போது அந்தத் தலைவைர்களைப் பின்பற்றலாம் அல்லவா!

தலைமைத்துவத்தைப்பற்றிய இந்தக் கண்ணோட்டம், இரண்டாயிரம் ஆண்டுகளாக, தேவன் தம் மக்களில் கிரியைசெய்ய அவருக்கிருக்கும் திறமையில் அவருடைய மக்கள் நம்பிக்கை வைப்பதை உரிந்துவிட்டது. அது அவர்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்காக மத குருமார்களையும், நிறுவனங்களையும் சார்ந்திருக்கும்படிச் செய்துவிட்டது. மதரீதியான ஒவ்வோர் அமைப்புமுறையும் ஓர் உள்ளூர், பரிசுத்த-மனிதனாகிய குருவை உருவாக்கிவிடுகிறது. இது வியப்பாக இல்லையா? அந்தப் பரிசுத்த மனிதனாகிய குரு ஆவிக்குரிய காரியங்களில் உள்ளூர் நிபுணராகிவிடுகிறார். இன்று தேவனுடைய மக்களுக்கிடையே இயேசுவின் இடத்தைப் பறித்துக்கொள்கிற வாழ்க்கைத்தொழில் சார்ந்த பாஸ்டர்களுக்கும், குருக்களுக்கும், 'ஊழியக்காரார்களுக்கும்' நாம் கொடுக்கிற பங்கை, இயேசுவோ அல்லது பவுலோ ஒருபோதும் எண்ணிப்பார்க்கவேயில்லை. இந்தக் கொடைகளை இயேசு ஒரு மக்கள் கூட்டத்தினரிடையே மிகவும் பரவலாக வைக்கிறார்; மக்கள் தங்களையோ அல்லது தங்கள் செயல்திட்டங்களையோ அல்லது தங்கள் புத்தகங்களையே சார்ந்திராமல், கிறிஸ்துவைச் சார்ந்திருப்பதற்கு அவர்களுக்கு உதவிசெய்கிறார்கள்.

ஆதி அப்போஸ்தலர்கள் "ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை" என்பதுபோன்ற காரியங்களைச் சொன்னபோது, அது சரீரத்தில் தங்களுடைய இடத்துக்கு ஒரு பயமுறுத்துதல் என்று அவர்கள் ஒருபோதும் நினைக்கவில்லை. "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது...அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல." இயேசுவைப் பின்பற்றியவர்கள், ஒருவரோபொருவர் பரஸ்பர உறவில் வாழ்கையில், இயேசுவின்மேல் நம்பிக்கைவைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அவரிடமிருந்து நேரடியாகக் கேட்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினார்கள்.

போதிப்பதின் முக்கியத்துவத்தை அல்லது ஆலோசனையின் முக்கியத்துவத்தை அவர்கள் குறைத்து மதிப்பிடவில்லை; மாறாக, அதை அவர்கள் அதின் நேர்த்தியான இடத்தில் வைத்தார்கள். சரீரத்தில் நமக்கு என்ன கொடை இருந்தாலும் சரி, அது மக்களில் தேவன் செய்துகொண்டிருக்கும் வேலைக்கு வளமூட்டுவதற்குதானே தவிர, அதற்குப் பதிலீடாக மாறுவதற்காக அல்ல. அதிக பட்சமாக, ஒரு தலைவன் என்ற முறையில் செய்கிற வேலை சும்மா தற்காலிகமானதுதான். மக்களுடைய வாழ்க்கைப் பாதையில் அவர்களுக்கு உதவிசெய்யலாம். ஆனால், அந்த வேலையைச் செய்துவிட்டு சகோதரன் அல்லது சகோதரி என்ற தங்கள் நிரந்தரமான இடத்துக்கு அவர்கள் சீக்கிரமாகத் திரும்பிவிட வேண்டும்.

ஒருவனுடைய பணிந்தடங்கிய வாழ்க்கையின்மூலம் இயேசு பரிசுத்த ஆவியானவரால் தம்மை வெளியாக்கும்போது, தலைமைத்துவம் சரீரத்தில் இயல்பாக எழும்புகிறது. துக்ககரமான காரியம் என்னவென்றால், உரிமையுடைய ஆட்சியாளரை உயர்த்தி, அவருக்கு மகிமையைச் செலுத்துவதற்குப் பதிலாக, நாம் செய்தியாளர்களை உயர்த்தி, அவர்களுக்கு மகிமையைச் செலுத்துகிறோம் என்பதையே சபையில் இருக்கிற நட்சத்திர அந்தஸ்தின் நோய்க்கான அறிகுறிகள் காண்பிக்கின்றன.

சரீரத்தில் ஒருவனும் இயேசுவின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது. இந்தக் காரணத்தினால்தான் இயேசுவின் சுவிசேஷத்தைப் புரட்டுகிற ஒருவனுக்கும் செவிகொடுக்கக்கூடாது என்றும் (கலா. 1), மற்றவர்களுக்கான தேவனுடைய சித்தம் தனக்குத் தெரியும் என்று புரட்டுகிற ஒருவனையும் பின்பற்றக்கூடாது என்றும் (கொலோ. 2) பவுல் மக்களிடம் கூறினார். மக்கள் கர்த்தரைச் சாராமல், வேறு யாரையாவது சார்ந்து வளரும்போது, கிறிஸ்துவின் சரீரத்திற்காக இயேசுவின் இருதயத்தை உடையவர்கள் எப்போதும் கவன

மாயிருப்பார்கள். கிறிஸ்துவுக்கு மட்டுமே அனுதினம் பணிந்தடங்கி எப்படி விடுதலையோடு வாழ்வது என்று கற்றுக்கொள்வதிலுள்ள மகிழ்ச்சியை ஒரு சகோதரன் அல்லது சகோதரியிடமிருந்து அவர்கள் ஒருபோதும் திருடிக்கொள்ள மாட்டார்கள்.

***நிர்வகிக்க அல்ல, மாறாக சேவிக்க***

ஒரு பிரபலமான போதகர் ஆவிக்குரிய தலைமைத்துவத்தைப் பின்வருமாறு வரையறுத்தார். "மக்களைச் சுதந்தரமாகவிட்டால் அவர்கள் தாமாகவே எதைச் செய்ய மாட்டார்களோ அதைச் செய்வதற்கு அவர்களை உந்தித்தள்ளுவதற்கான திறமையே" ஆவிக்குரிய தலைமைத்துவம் என்று அவர் கூறினார். இது தலை மைத்துவம் அல்ல, தந்திரமாகக் கையாளுதல். இராணுவத் தலைமை அதிகாரி அளிக்கிற அடிப்படைப் பயிற்சியில், அல்லது வியாபார விளம்பரங்களை வடிவமைத்து விளம்பரம் செய்வதில் இது உண்மையா யிருக்கலாம். ஆனால், தேவன் தம் பிள்ளைகளைக்குறித்து இதற்கு நேர்மாறான ஒன்றைத் தம் மனதில் வைத்திருக்கிறார்.

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள வேலைக்காரன்-தலைமைத்துவத்தைக்குறித்து, உண்மையில், இன்று ஒவ்வொருவரும் உதட்டளவில் மட்டுமே பேசுகிறார்கள். ஆனால், மக்களுக்கு எது மிகச் சிறந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அவர்களை அதைச் செய்யவைப்பதற்கு நீங்கள் முயற்சிசெய்யும்வரை, நீங்கள் அவர்களுடைய வேலைக்காரனாக அல்ல, மாறாக அவர்களுடைய எஜமானாகச் செயல்படுகிறீர்கள் என் பதைப் பெரும்பாலானவர்கள் உணர்வதில்லை. நீங்கள் அவர்களைச் சேவிக்கவில்லை; மாறாக, அவர்கள் உங்களைச் சேவிக்கிறார்கள்.

மற்றவர்கள் தன்னைச் சேவிக்க வேண்டும் என்று கூற யாருக்காவது உரிமை உண்டு என்று நீங்கள் நினைத்தால், அது இயேசு மட்டுமே. ஏனென்றால், அவர் இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தர். அவர் தம் அந்தஸ்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்க முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்ய வில்லை. அதற்குப்பதிலாக, மக்கள் அவருடைய பிதாவின் ஜீவனில் வீட்டில் தங்குவதுபோல் தங்குவதற்கு அவர் அவர்களுக்கு உதவிசெய்வதில் அக்கறை கொண்டிருந்தார்.

இன்று நிர்வாகத்தின் மொழியைப் பேசாமல் நம்மால் தலைமைத்துவத்தைப்பற்றிப் பேச முடியாது. தலை மைத்துவம் என்பது மற்றவர்கள் செயல்படுவதற்கு வல்லமையால், ஆதிக்கத்தால் அல்லது அபிஷேகத் தால் அவர்களைக் கட்டாயப்படுத்துகிற காரியம் என்பதுபோல் நாம் பார்க்கிறோம். நம் மதரீதியான அமைப்புமுறைகள் தேவன்மேல் இருதயம் கொண்டவர்களை எடுத்து, அவர்களைச் செயல்திட்டங்களை நிறைவேற்றுகிற மேலாளர்களாக மாற்றிவிடுகிறது. அவர்கள் மக்களைத் தங்கள் செயல்திட்டத்துக்கு ஒத் திருக்கச்செய்கிறார்கள்; அதைச் செய்வதில் மக்களுக்கு நாட்டம் இருக்கிறது என்றும் அவர்கள் நினைக் கிறார்கள். நிறுவனரீதியான அமைப்புமுறையில் உயர் பதவியை அடைகிறவர்கள் மக்கள்மேல் மாபெரும் அதிகாரம் செலுத்துகிறார்கள். அதிலிருந்து அவர்கள் தனிப்பட்ட வகையில் பெரிய அநுகூலத்தையும் பெறுகிறார்கள்.

இயேசு மாம்சத்தில் வாழ்ந்தபோது, மற்றவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தியதுபோல் அவர் அதிகாரத் தைப் பயன்படுத்தவில்லை. அது அவருடைய சீடர்களுக்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றியது. அதிகாரத்தைச் சேர்த்துக்கொள்வதற்குப்பதிலாக, அவர் அதைவிட்டுத் தம்மை வெறுமையாக்கினார். பிதா வின் ஜீவனுக்குள் மக்களை நடத்துவதற்கான வழி, அவர்களை அங்கு நடத்துவதல்ல, மாறாக அவர்கள் பிதாவின் ஜீவனைப் பார்க்கச் செய்து, அதில் வாழக் கற்றுக்கொள்ள அவர்களுக்கு உதவுவதே வழி என் பதை அவர் அறிந்திருந்தார். மக்களைக் கட்டாயப்படுத்துவது ஒருபோதும் வேலைசெய்யாது என்று அவருக் குத் தெரியும். எனவே, தெரிந்தெடுக்கும் சுதந்தரத்தை அவர் எப்போதும் அவர்களுக்குக் கொடுத்தார். அது போல, மக்களிடம் சத்தியத்தைச் சொல்லி, அவர்களுடைய மனச்சாட்சியின்படி தெரிந்தெடுக்க அவர் களுக்கு கொடுத்துப் போகவிடக்கூடிய கிருபை ஆதி சீடர்களிடம் இருந்தது.

தேவபக்தியுள்ள எந்தத் தலைவனும் அதைத்தான் செய்வான். நிர்வகிக்கக்கூடிய அல்லது சுயநலத்திற்காகப் பயன்படுத்தக்கூடிய ஆதிக்கம், பணம், செயல்திட்டங்கள் ஆகியவைகளின் அதிகார மையங்களை அவர்கள் ஒருபோதும் உருவாக்க மாட்டார்கள். அதற்கு மாறாக, தேவன் அவர்களை நடத்துவதற்கேற்ப செய்வதற்கு அவர்கள் சரீரத்தை விடுதலைசெய்வார்கள்.

***அடையாளம் அல்ல, மாறாக செயல்பாடு***

தலைமைத்துவத்தில் பங்கு வகிப்பதை ஆதாரமாக வைத்து அல்லது ஊழியத்தின் பட்டத்தை ஆதாரமாக வைத்து சரீரத்தில் தான் யார் என்று அடையாளம் காண விரும்புகிறவர்களைக்குறித்து ஜாக்கிரதையா யிருங்கள். இயேசு மற்றவைகளைப்பற்றித் தெளிவாகப் பேசியதுபோல, இப்படிப்பட்ட அபத்தத்தைச் சார்ந் திருக்கக் கூடாது என்றும் அவர் தம் சீடர்களிடம் தெளிவாகக் கூறினார். ஏனென்றால், இது நம் பிதாவின்

குடும்பத்தைப்பற்றிய ஒரு பொய்யான கண்ணோட்டத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. "நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள். நீங்கள் குருக்கள் என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" (மத். 23:8, 10).

சரீரத்தின் ஒவ்வோர் அவயவமும் தலையுடன் இணைக்கப்பட வேண்டியதுதான் அதின் முதன்மையான உறவாகும். பின்பு, சகோதரன் சகோதரி என்ற முறையில் அவருடைய ஜீவனை ஒருவரோடொருவர் பகிர்ந்துகொள்ள வேண்டும். தேவனுடைய குமாரர்கள், குமாரத்திகள் என்ற அடையாளத்தையும், கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகள் என்ற அடையாளத்தையும்விட வேறு பெரிய அடையாளம் ஒன்றும் தேவையில்லை. மற்றவர்களுக்கு உதவ நாம் செய்ய வேண்டும் என்று தேவன் நம்மிடம் கேட்கிற எதுவும் எளிமையான அந்த அடையாளத்தை மாற்றிவிடாது. நம் கலாசாரம் சரீர வாழ்க்கையை 'தலைவர்களையும்' 'தலைவர்கள் அல்லாதவர்களையும்' சுற்றிக் கட்டியிருப்பதால், தேவனுடைய ஜீவனைச் சேர்ந்து பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற சுதந்தரத்தை அது சரீரத்திலிருந்து திருடிக்கொள்கிறது.

தங்கள் பட்டங்களில் அல்லது வேதாகமத்தின் மூல மொழியில் தங்களுக்கிருக்கும் திறமையில் அல்லது மற்ற விசுவாசிகளுக்குக் கிடைக்காத ஏதோ ஒரு வகையான 'கூடுதலான' அபிஷேகத்தில் தங்கள் தகுதியைத் தேடுகிறவர்கள், அப்படிச் செய்வதால், தேவனுடைய சுபாவத்தை உண்மையாகவே அவர்கள் எவ்வளவு கொஞ்சமாக அறிந்திருக்கிறார்கள் என்று காண்பிக்கிறார்கள். எது உன்னை மற்றவர்களுக்கு மேலாக உயர்த்தினாலும் சரி, அது தேவன் உன்மூலம் பகிர்ந்துகொள்ள விரும்புகிற எதுவாக இருந்தாலும் சரி, அதின் மதிப்பை அழித்துவிடுகிறது.

எனவே, தலைவர்கள் என்ன செய்கிறார்கள்? வேதவாக்கியங்கள் தலைமைத்துவத்தின் மூன்று செயல்பாடுகளை நமக்கு வழங்குகிறது:

**கட்டுப்படுத்துவதற்கல்ல, மாறாக ஊக்குவிக்க**: சரீரத்தில் முன்னின்று நடத்துவதென்றால் தேவனுடைய நடத்துதலின்படியும், செயல்பாடுகளின்படியும், நடவடிக்கைகளின்படியும் ஆரம்பிப்பதும், சேர்ந்து நடந்து, அந்த அனுபவத்தில் பகிர்ந்துகொள்ள மற்றவர்களை அழைப்பதுமாகும். ஒரு நிகழ்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும், அல்லது மிகச் சிறந்த வழி என்று தாங்கள் நினைக்கிற விதத்தில்தான் அந்த நிகழ்ச்சி நடைபெற வேண்டும் என்று தலைமைத்துவம் நிர்பந்திக்காது. மாறாக, தேவன் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தியிருப்பதை வெளியாக்க அவர்களை அனுமதிக்க செயல்ஊக்கிபோல் செயல்படுகிறது. அது ஒருவன் சேர்ந்து பாடுவதைக் குழு நடத்துவதுபோல, அல்லது ஐக்கியம்கொள்வதற்காக மக்களை அழைப்பதுபோல, அல்லது எல்லாரும் சேர்ந்து வெளியே செல்கிற ஒரு பயணத்தைத் திட்டமிடுவதைப்போல எளிமையாக நடக்கிறது. தலைமைத்துவம் என்ற கொடை காரியங்களைத் தொடங்கிவிட்டு, மற்றவர்கள் அதைப் பிடித்துக்கொண்டு, அதனுடன் ஓடுவார்களா என்று பார்க்கிறது.

**நடிப்பதற்கல்ல, மாறாக தரிப்பிப்பதற்கு:** தங்கள் கொடைகளை வைத்து சரீரத்தில் மைய இடத்தை எடுத்துக்கொள்வதற்குப்பதிலாக, இயேசுவின் ஜீவனில் வளர மற்றவர்களுக்கு உதவவும், அவர்கள்மூலம் தேவன் தம்மை எப்படி வெளியாக்க விரும்புகிறார் என்பதைக் கண்டுபிடிக்கவும் உண்மையான தலைவர்கள் திரைக்குப்பின்னால் இருக்க விரும்புகிறார்கள். எடுத்துக்காட்டின்மூலமாகத்தான் இதை மிகச் சிறப்பாக நிரூபித்துக்காட்ட முடியும்; எனவே, அர்த்தமுள்ள வகையில் தேவனோடு உறவுகொள்வது எப்படி என்று கற்றுக்கொள்ள மற்றவர்களுக்கு அவர்கள் உதவுகையில், மற்றவர்களுக்குமுன்பாக அவர்கள் திறந்த வாழ்க்கை வாழ்வார்கள். அவர்கள் மக்களுடைய வெட்கத்தை ஒருபோதும் சுயநலத்திற்காகப் பயன்படுத்த மாட்டார்கள், அல்லது அவர்கள் தங்களுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டார்கள். மாறாக, வெட்கத்திலிருந்து அவர்களை விடுதலையாக்குகிற மறுசாயலாக்கும் உறவில் அவர்கள் தேவனோடு தங்களை ஈடுபடுத்திக்கொள்ள உதவுகிறார்கள். (சிறு சிறு குழுக்களில்தான் இது மிகச் சிறப்பாக நடைபெறுகிறது என்று இதைச் செய்கிற யாருக்கும் தெரியும். ஏனென்றால், அங்கு பெரிய அளவில் கருத்தரங்கு நடைபெறுவதற்குப்பதிலாக உண்மையான உரையாடல் பரிமாற்றம் நடைபெறுகிறது.) மக்கள் தேவனுடைய ஜீவனில் விடுதலை உடையவர்களாக மாறும்போது, மற்றவர்களோடு எப்படி உறவுகொள்ள வேண்டும் என்று அவர்கள் அறிந்துகொள்வார்கள். அதன் விளைவாக சரீரம் அவர்களைச் சுற்றியுள்ள உலகத்துக்கு இயேசு யார் என்பதைப்பற்றிய ஒரு நிறைவான சித்திரத்தைப் பிரதிபலிக்கும்.

**போலீஸ்காரன் வேலைசெய்வதற்காக அல்ல, மாறாக அவர்கள்மேல் விழிப்பாயிருக்க:** சரீரத்தை நிர்வகிக்க முயற்சிசெய்யாமல் இருக்கையில், சரீரம் முழுமையில் வாழ அதற்கு உதவ தலைவர்கள் தங்களைத் தாண்டிப் பார்ப்பார்கள். தங்கள் சுய இலாபத்திற்காக சரீரத்தைச் சுரண்டிப்பிழைப்பவர்களை அவர்கள் தேடிக் கண்டுபிடித்து, அவர்களோடு நேர்மையோடும், அன்போடும் இடைப்படுவார்கள். உண்மையான விசுவாசிகளையும், பொய்யான விசுவாசிகளையும் பகுத்துணரக் கற்றுக்கொள்ள அவர்கள் இளைய விசுவாசிகளுக்கு உதவிசெய்து, அவர்கள் திசைமாறிப்போகும்போது, அவர்களை மீண்டும் இயேசுவுக்கு நேராக நடத்துவார்கள்.

*ஒரே மேய்ப்பனையுடைய ஒரே மந்தை*

எசேக்கியேல் 34ஆம் அதிகாரத்தில் தேவன் பொய்யான மேய்ப்பர்களை அம்பலப்படுத்தியபோது, “பொய்யான மேய்ப்பர்களை அகற்றிவிட்டு, அவர்களைவிடச் சிறந்த மேய்ப்பர்களை நான் கண்டுபிடித்துத் தருவேன்,” என்று அவர் கூறவில்லை. பொய்யான மேய்ப்பர்களை அகற்றிவிட்டு, தாமே அவர்களை மேய்க்கப்போவதாக அவர் கூறினார். அவர் அவர்களைப் பாதுகாப்பான புல்வெளிக்கு நடத்திச் சென்று, அவர்களைத் தீங்குக்கு விலக்கிக் காப்பார். அதற்குப்பிறகு அவர்கள் ஒருபோதும் பயப்பட மாட்டார்கள் அல்லது அவர்கள் இழிவாக நடத்தப்பட மாட்டார்கள்.

இப்படிப்பட்ட புத்திமதி இருக்கும்போது, தாங்கள் மேய்ப்பர்களாக இருக்க வேண்டும் என்று இன்று அநேக மக்கள் ஏன் வற்புறுத்துகிறார்கள்? 1 பேதுரு 5ஆம் அதிகாரம் இதைப்பற்றிப் பேசவில்லை. மூப்பர்கள் என்றழைக்கப்படுபவர்களைப் பார்த்து, “கட்டாயத்தினால் அல்ல, பணத்துக்காகவும் அல்ல, மாறாக இயேசு நடத்தியதுபோல் மக்களை நடத்துங்கள். மந்தையை அடக்கி ஆளாதிருங்கள். மற்றவர்களுக்கு கிறிஸ்துவின் ஜீவனின் எடுத்துக்காட்டாக இருந்து அதைச் செய்யுங்கள்,” என்று அவர் கூறினார்.

இந்த முறையில் அவருடைய சார்பாகச் செயல்பட முயற்சிசெய்கிறவர்கள் செல்லுபடியாகாத ஒரு நிலையில் தங்களை வைக்கிறார்கள். யூஜின் பீட்டர்சன் என்பவர் சங்கீதம் 14:3ஐ மொழியாக்கம் செய்யும்போது அதை இவ்வாறு விவரிக்கிறார்: “ஆடுகள் மாறிமாறி மேய்ப்பனாக நடிக்கின்றன.” மக்களை வஞ்சிக்கவும், தந்திரமாகக் கையாளவும் அது பொய்யான போதகர்களுக்கு ஒரு மேடையை அமைத்துக் கொடுத்து, தேவனுடைய குடும்பத்தின் நிஜத்தைப் புரட்டுகிற நிலைமைக்குள் நல்ல நோக்கம் கொண்ட மக்களை மூலையில் முடக்குவதுபோல் முடக்கிவிடுகிறது.

நம்மிடம் தலைவர்தாமே இருக்கும்போது, பின்பற்றுவதற்கு நமக்கு வேறு தலைவர்கள் வேண்டும் என்று நாம் ஏன் நினைக்கிறோம்? தாம் மட்டுமே மேய்ப்பன் என்றும், தம்மைப் பின்பற்றுபவர்கள் “ஒரே மேய்ப்பனையுடைய ஒரே மந்தையாக மாறுவார்கள்,” என்றும் யோவான் 10ஆம் அதிகாரத்தில் இயேசு கூறினார். இன்று கிறிஸ்துவின் சரீரம் ஏன் இவ்வளவு பலவீனமாகவும், பிளவுண்டும் இருக்கிறது? ஏனென்றால், நாம் ஆயிரக்கணக்கான மேய்ப்பர்களைத் தேடிப் போகிறோம். கிறிஸ்துவின் போர்வை தன்மேல்தான் இருக்கிறது என்று ஒவ்வொருவரும் கோருகிறார்கள்; மிகச் சிறந்தது என்ற தாங்கள் நினைக்கிற காரியங்களுக்குள் அவர்கள் மக்களை நடத்துகிறார்கள்.

நடைமுறையில் இந்த நிஜத்தை நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள்? உங்களுடைய மேய்ப்பனாக இருக்க விரும்புகிற ஒருவருடைய பாரத்தால் நீங்கள் அழுத்தப்படுவதாக நினைத்தால், அவரை விட்டு விலகியிருங்கள். தேவன் அவர்களில் செய்திருக்கும் சில வேலைகளிலிருந்து நீங்கள் கொஞ்சம் பயன்பெற முடியும். ஆனால், உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை அவர்கள்மூலம் வாழ்ந்தால், அது உங்களைத் திருடிக்கொள்ளும். அவர்களுடைய நிறுவனங்களை இடிக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். தேவன் உங்களுக்குத் தருகிற சுதந்தரத்தில் சாதாரணமாக வாழுங்கள்.

தேவன் ஜீவனால் உருவமைத்த ஒரு நபரை உங்களருகே கொண்டுவரும்போது, அவரைச் சார்ந்துகொள்ளாமல், அவருக்குச் செவிகொடுங்கள், அவரைக் கவனியுங்கள். பொய்யான தலைமைத்துவத்திற்கு இரையாக மாறும் அளவுக்குப் புத்திகெட்டவர்களாக இருக்காதீர்கள். அப்போது, தேவன் உங்களருகே வைத்திருக்கும் அற்புதமான மக்களின் கொடைகளைத் தவறவிட்டுவிடுவீர்கள்.

மற்றவர்கள்மேல் ஆளுகைசெய்ய வேண்டும் என்ற ஆசையிலிருந்து தேவன் விடுதலையாக்கியிருக்கிற அநேகருள் நீங்கள் ஒருவர் என்றால், இது நீங்கள் துரிதப்பட வேண்டிய நேரமாக இருக்கக் கூடும். நீங்கள் தனித்திருக்க வேண்டும் என்பதற்காக தேவன் உங்களை அதிகார அமைப்புமுறைக்கு வெளியே நடத்தி வந்திருக்கிறார் என்று ஒரு கணம்கூட நினைக்க வேண்டாம். அவரில் இருக்கும் நிறைவான ஜீவனுக்குள் இன்னும் அதிக அளவில் நீங்கள் மக்களைச் சேவிக்க வேண்டும் என்பதற்காகவே அமைப்புமுறையின் இறுக்கமான பிடியிலிருந்து அவர் உங்களை விடுதலையாக்கியிருக்கிறார்.

நாம் ஒரே மேய்ப்பனை ஏற்றுக்கொள்ளும்போது, ஒரே மந்தையாக இருப்போம். அவரில் வாழ்வது எப்படி என்றும், அவரைப் பின்பற்றுவது எப்படி என்றும் நாமெல்லாரும் கற்றுக்கொள்ளும்போது மட்டுமே, அவர் தம் சபைக்காக விரும்புகிற ஒற்றுமையின் மகிழ்ச்சியையும், வல்லமையையும் நாம் உணர்வோம். இந்தக் குடும்பத்தில் முன்னின்று நடத்துகிற எவனும், இதைவிடக் குறைவான எதையும் விரும்ப மாட்டான்.